செய்தி வெளியீடு எண்: 158 நாள்: 17.2.2010

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>அரசு கால்நடை மருத்துவமனைகளுக்கு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 411 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள் தேர்வு!</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் நியமன ஆணைகளை வழங்கினார்!</u>

தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத் துறையில் 2006 மே திங்களுக்குப் பிறகு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மொத்தம் 495 கால்நடை உதவி மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வேலையில்லா கால்நடை அறிவியல் பட்டதாரிகளுக்கு மேலும் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையிலும், கிராமப் புறங்களிலுள்ள கால்நடைகளுக்குச் சிறந்த தரமான மருத்துவ உதவிகளை அளித்திடும் நோக்கிலும், தற்போதுள்ள நிலை–1 கால்நடை கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, அவற்றில் இளநிலை கால்நடை உதவி மருத்துவர்களை பணி நியமனம் செய்திட இந்த அரசு முடிவு செய்தது. அதன் பயனாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 444 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இன்றைய தினம், 411 பேருக்குப் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (17.2.2010) வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

இந்த நியமனத்துடன், 2006 மே மாதம் முதல் இதுவரை கால்நடைத் துறையில் மொத்தம் 906 கால்நடை மருத்துவர்கள் அரசுப் பணியில் அமர்த்ததப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, ஊரகத் தொழில்கள் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, கால்நடைத் துறைச் செயலாளர் திரு. சி. முத்துக்குமாரசுவாமி, இ.ஆ.ப. மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.